**மடுள்ள பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 24 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மடுள்ள பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது ரூபா 59,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | கைத்தவறினால் மூலதனமாக்கப்படாதிருந்த அந்த நிலையான சொத்துக்களை எதிர்வரும் ஆண்டின் போது மூலதனமாக்கி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2015 திசெம்பர் 28 ஆந் திகதி நன்கொடையாகக் கிடைத்த ரூபா 770,100 பெறுமதியான 300 நீர் மானிகள் பொதுக் களஞ்சியக் கணக்கு வரவு வைக்கப்பட்டு மூலதன ஈடுபடுத்தலுக்கான உதவி மூலமான பங்களிப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை பொருத்தப்பட்ட 83 | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் போது உரிய இருப்பு மூலதனமாக்கப்பட்டு சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

நீர்மானிகளின் பெறுமதி ரூபா 213,061 தொகை மூலதன ஈடுபடுத்தலுக்கான உதவி மூலமான பங்களிப்புக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு பொதுக் களஞ்சியக் கணக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,099,174 தொகையான சொத்துக்களின் விடயங்களுக்குரிய இருப்பு மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மெய்மையாய்வுச் சபையின் மூலம் பெறுமதி மதிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | பிரதேச சபைக்குரிய 04 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 4 வாகனங்களுக்காக எரிபொருள் எரிவு பரிசோதனை விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,312,403 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,883,402 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | 1,500 | - | - | - |
| (ii) | வாடகை | 7,479,115 | 5,981,548 | 5,953,208 | 407,140 | 5,332,260 | 5,320,664 | 5,320,664 | 378,800 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 566,700 | 901,895 | 901,895 | - | 517,500 | 761,734 | 761,734 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 12,603,105 | 7,579,334 | 397,652 | 2,264,799 | 34,650,350 | 6,465,324 | 4,990,055 | 1,692,597 |
| | மொத்தம் | 20,648,920 | 14,462,777 | 7,252,755 | 2,671,939 | 40,500,110 | 12,547,722 | 11,072,453 | 2,071,397 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 14,462,777 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 2,671,939 தொகை அதாவது 18 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 30 வரையிலும் மேலும் நிலுவையாகக் காணப்படுகின்ற ரூபா 769,061 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வியாபார வரி அறவிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மடுள்ள வாராந்த சந்தையில் வாடகையாளரினால் மீளாய்வாண்டிற்குரிய வரித்தொகை குறித்த திகதியில் உள்ளவாறு செலுத்தாமையினால் தாமதத் | அறவிடப்பட வேண்டிய தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | வரியிறுப்பாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அவர்களினால் எதிர்வரும் சில மாதங்களில் ரூபா 49,914 தாமதத் தண்டப் |

| | | |
|---|---|---|
| தண்டப் பணம் ரூபா 49,914 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | பணம் செலுத்தி தீர்க்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 302,497 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,446,502 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | 2019 மார்ச் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா 208,872 தொகையும் முத்திரைக் கட்டணத்தில் ரூபா 1,029,498 தொகையும் அறவிடப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | இதுவரையிலும் மடுள்ள பிரதேச சபையினால் வருடாந்தம் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பாதீட்டு அறிக்கையினதும் பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், ஐரோப்பா சங்கத்தின் ஒத்துழைப்புடன் மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2016 - 2020 காலப்பகுதிக்காக ஐந்து வருட மாவட்ட ஒன்றிணைந்த அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரமாக இருந்ததுடன் அந்த ஆவணங்களின் பிரகாரம் இதுவரையிலும் ஆண்டின் போது அடைந்து கொள்வதற்குத் |

| | | |
|---|---|---|
| | | தேவையான நோக்கங்கள் மற்றும் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படும். |

**(ஆ) கைவிடப்பட்ட இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் குறிப்பாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 39,350,000 தொகையான மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 38 வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ள சகல செயற்திட்டங்களும் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட வேண்டும். | பாதீட்டின் மூலம் மூலதன செலவினங்களுக்காக ரூபா 40,010,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 660,000 தொகை நிதியேற்பாட்டை மாத்திரம் வழங்குவதற்கு முடியுமாக இருந்தமையால் அந்தத் தொகைக்குரிய தெரிவு செய்யப்பட்ட வேலைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மடுள்ள பிரதேச சபை செயற்பாட்டுக் குழு என்ற பெயரில் இலங்கை வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட கணக்கின் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,713,794 ஆக இருந்ததுடன் ஆரம்பம் முதல் இந்தக் கணக்கின் பணத்தை உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படவில்லை. | உரிய செயற் திட்டத்திற்கான மிகுதி பணத்தைப் பயன்படுத்துதல் அல்லது உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் அந்த வீதிகளைப் பராமரிக்கும் கால எல்லை பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லையாயின் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் ஏனைய பொது அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக அந்தப் பணம் ஒதுக்க முடியுமாக இருந்ததுடன் அதன் பிரகாரம் பொருளாதார அபிவிருத்தி |

| | | | |
|---|---|---|---|
| | | | அமைச்சு மேற்கொண்ட வழி அல்லது கொல்லதெனிய தலாவ வீதியில் 300 மீற்றர் நிர்மாணிப்பதற்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள 450 வீதிகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், வீதி பதிவேடொன்று தயயரிக்கப்பட்டு வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரையில் வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒரு மாத காலத்தில் வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்கும் இயலுமை காணப்படுகின்றது. |
| (இ) | 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 584,822 தொகையான வேலைக் கடன்கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீளாய்வாண்டின் போது தீர்க்கப்படாதிருந்த 09 வேலைகள் இதுவரையிலும் காணப்பட்டதுடன், இந்த வேலைகளின் நிறுத்திவைத்தல் பணம் இதுவரையிலும் செலுத்தப்படவில்லை. 2019 ஆம் ஆண்டின் போது வருமானமாக செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி 02 பதவிகளில் மூன்று உத்தியோகத்தர்களின் மிகையும், 04 பதவிகளில் 08 ஊழியர்களின் வெற்றிடமும் காணப்பட்டன. | மிகை பதவியணியினர் பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மிகை ஊழியர்களின் எண்ணிக்கையை எதிர்காலத்தில் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தொழில்நுட்ப உத்தியோகத்தரைப் பெற்றுக்கொள்வதற்காக உள்ளுராட்சி ஆணையாளருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. நூலகர் மற்றும் வருமானப் |

| | | |
|---|---|---|
| | | பரிசோதகர் பதவிகளில் ஏனைய உத்தியோகத்தர்களினால் கடமைகள் நிறைவேற்றப்படுகின்றது. சாரதியைப் பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய பொது விளையாட்டு மைதானம் அமைந்துள்ள காணியில் காணப்படுகின்ற கலாசார நிலையக் கட்டிடம் 2013 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | விளைவற்ற சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். | சபைக்குச் சொந்தமான தற்போது களஞ்சியமொன்று காணப்படாமையால் எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுப்பதற்காக பொருள் இருப்பு அவ்வாறு களஞ்சியப்படுத்தப்பட்டதாகவும் எதிர்காலத்தில் ஒழுங்குபடுத்தி நிலையான சொத்தாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| ரூபா 20,976 தொகையான 20 லீற்றர் கொள்ளவுடைய 76 கழிவுப் பொருள் கூடைகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | விளைவற்ற சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். | கழிவுப் பொருள் கூடையொன்றின் விலை ரூபா 276 ஆக இருந்ததுடன் சந்தை விலையுடன் ஒப்பிடும் போது உயர்ந்த பெறுமதியாக இருந்ததுடன் மக்கள் அதனை கொள்வனவு செய்வதை நிராகரித்தமையால் விற்பனை செய்தல் இடம்பெறவில்லை. |

**3.4.2 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 06 வாகனங்களின் சட்டரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்படவில்லை. | சபைக்குரிய வாகனங்களின் உரித்து கையேற்கப்பட வேண்டும். | சபைக்கு கையேற்கப்படாத வாகனங்களின் உரித்தை எதிர்காலத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| சபைக்குச் சொந்தமான இரண்டு வாகனங்களுக்காக | வாகனங்களுக்காக வருமான | எதிர்காலத்தில் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் |

| | | |
|---|---|---|
| வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படவில்லை. | அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டும். | கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டிற்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தையும், செலவினத்தையும் ஆண்டின் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 05 வருமான விடயங்களில் 11 சதவீதம் முதல் 185 சதவீதம் வரையும், 03 செலவின விடயங்களில் 11 சதவீதம் முதல் 24 சதவீதம் வரையும் முரண்கள் காணப்பட்டன. | சாத்தியமான பாதீடு தயாரிக்கப்பட்டு அதில் காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகள் அடையப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் போது பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கும் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதன் மூலம் முரண்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பிரதேச சபையில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு விடயத்திற்குப் பொறுப்பாகச் செயற்படும் உத்தியோகத்தரை ஈடுபடுத்துதல் அல்லது வேறு |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தர் ஒருவரை உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தராக நியமித்து உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்று தாபிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |